**வாக்குமூலம்**
**நீதிமன்றம் இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, இராணிப்பேட்டை.**
**வழக்கு எண். SC 69/2020**
**வழக்கு சாட்சி PW 9**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | டாக்டர் நாகேந்திரகுமார் | ஜாதி | : | – |
| தந்தை பெயர் | : | அர்ஜுனன் | தொழில் | : | Associate Professor |
| கிராமம் | : | Parktown | சமயம் | : | – |
| தாலுக்கா | : | Chennai | வயது | : | 38 |

**(எதிரி ஆஜர்)**

**தேதி 03.01.2024**

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ உயர்நிலை துறையில் இணை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.09.2019 அன்று நான் அரசு வேலூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணியில் இருந்தபோது நீதித்துறை நடுவர் வேலூர் அவர்களிடம் இருந்து பெறப்பட்ட வேண்டுகோள் கடிதத்தின் படி இராணிப்பேட்டை காவல் நிலைய கு.எண். 576/2019 வழக்கில் சம்மந்தப்பட்ட வாலாஜா அரசு மருத்துவமனை பிரேத பரிசோதனை எண் 186/2019-ன் படி இறந்துபோன திருமதி. தனலட்சுமி, வயது 19, பெண் என்பவரது நாவடி எலும்பினை முதல் நிலை பெண் காவலர் 307 திருமதி. பிரேமா, இராணிப்பேட்டை காவல்நிலையம் என்பவர் மூலம் பெற்றுக்கொண்டு மருத்துவ பரிசோதனை செய்தேன். பரிசோதனையின் போது நாவடி எலும்பை சுற்றியுள்ள மென்திசுக்கள் வெளிறி இருந்தன. அதில் முறிவுகள் எதுவும் தென்படவில்லை. பென்சிடின் ஆய்வில் ரத்தப்பொருட்கள் எதுவும் கண்டறியப்படவில்லை. இதனால் நாவடி எலும்பு இயல்பாக இருந்தது என்று கருத்து தெரிவித்து சான்று வழங்கினேன். நான் வழங்கிய நாவடி எலும்பு பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.7** ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH